## தமிழ்நாட்டை பின்தங்கிய மாநிலமாக ஆக்கிவிடாதீர்கள்!

# பா.ஜ.க. கூட்டணிக்குள்ளேயே தென்னிந்தியா புறக்கணிப்பு!

## ஒன்றிய பட்ஜெட் குறித்து – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**சென்னை, பிப். 4 -**

**”ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் பிகார் போன்ற பின் தங்கிய மாநிலத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. அதேநேரம் தமிழ்நாடு போன்ற வளர்ந்த மாநிலங்களை பின் தங்கிய மாநிலங்களாக ஆக்கி விடாதீர்கள்” என்று தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவரான கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்து தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர்,

“ஒன்றிய அரசின் பட்ஜெட் பாட்னா மோடிலும், பாட்னா மூடிலும் இருக்கிறது. இன்று இருக்கக் கூடிய பா.ஜ.க. ஆட்சி தொடர்வதற்கு உறுதுணையாக இருக்கக் கூடிய பிகாருக்கு நன்றிக்கடனாக இந்த பட்ஜெட்டை நான் பார்க்கிறேன்.

அதில் கூட பாஜகவுடைய தென்னிந்திய கூட்டணிக் கட்சி ஆட்சி செய்யும் மாநிலத்துக்கு எதுவும் இந்த பட்ஜெட்டில் செய்யவில்லை. ஆனால் பிகாரில் இருப்பவர்களுக்குதான் செய்திருக்கிறார்கள். பாஜக கூட்டணிக்குள் கூட வட இந்தியா தென்னிந்தியா என்ற வித்தியா சத்தைப் பார்க்க முடிகிறது.

பிகார் மாநிலத்துக்கு செய்ய வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. இந்தியாவின் ஒரு பகுதியான அந்த மாநிலம் முன்னேற வேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு கருத்துகள் இல்லை. ஆனால் அதற்காக வேறு எந்த மாநிலம் பற்றியும் கவலை கொள்ளாமல் இருப்பது என்ன நியாயம்?



வடகிழக்கு மாநிலங்களுக்கு பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடகிழக்கின் நிலைமை நமக்கு புரியும். அதனால் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இவை இரண்டையும் தவிர வேறு மாநிலங்களே உங்கள் கண்ணுக்கு படாத அளவுக்கு பட்ஜெட்டை உருவாக்கித் தருவது பல மாநிலங்களுக்கு எதிரானது, மாநில உரிமைகளுக்கு எதிரானதாகத்தான் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

*பிகார், வடகிழக்கு இரண்டுமே கூடுதல் உதவி தேவைப்படும் மிகவும் பின் தங்கிய பகுதிகள். பிகார் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இந்நிலையில் ஒன்றிய அரசின் உதவி பிகாருக்கு கிடைப்பதை அரசியல் கணக்கோடுதான் பார்க்க வேண்டுமா?*

பிகார் பின் தங்கியிருக்கக் கூடிய, முன்னேற வேண்டிய ஒரு மாநிலம். அதில் மாற்றுக் கருத்தே இல்லை. அதேநேரம் மகாராஷ்டிரா உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் தான் ஒன்றிய அரசுக்கு மிக அதிகமான வருவாயை ஈட்டித் தருகிறது. அதற்காக எல்லாவற்றையும் எங்களுக்கே கொடுத்துவிடுங்கள் என்று நான் கூறவில்லை.

இந்த மாநிலங்களுக்கு எந்த வளர்ச்சித் திட்டங்களுக்கும் ஒன்றிய அரசு பணம் கொடுக்கவில்லை என்றால், இந்த மாநிலங்களும் விரைவில் ஒரு காலகட்டத்தில் பின் தங்கிய மாநிலங்கள் என்ற நிலைக்கு தள்ளப்படக் கூடிய அபாயம் இருக்கிறது.

உதாரணத்துக்கு தமிழ்நாடு இன்றைக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் ஒன்றிய அரசு 29 பைசா திரும்பிக் கொடுக்கிறது. அதேநேரம் பிகார் ஒரு ரூபாய் கொடுத்தால், ஒன்றிய அரசு அதை ஏழு ரூபாயாக திருப்பிக் கொடுக்கிறது.

தமிழ்நாடு தொடர்ந்து மக்கள் தொகையை கட்டுப்படுத்தி, மனித வளக் குறியீடு, மக்கள் நலத் திட்டங்கள் என சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில்... ஒவ்வொரு முறையும் நாம் பாதிக்கப்படும் போது , இந்த அநீதியை எதிர்த்துக் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் கோவை மாவட்டம் அதிக வருவாயை மாநில அரசுக்கு ஈட்டிக்கொடுத்தாலும், விகிதாச்சார அளவில் பார்க்கும்போது பின் தங்கிய மாவட்டமான அரியலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரிக்கோ அதிக நிதி ஒதுக்குகிறார்கள். இந்த அளவுகோலை ஒன்றிய அரசுக்கு பொருத்திப் பார்க்க முடியாதா?*

நம்முடைய இட ஒதுக்கீட்டின் அடிப்படையே யாரெல்லாம் ஒடுக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

முதலமைச்சர் எல்லா மாவட்டங்களுக்கும் தொழில் முனைவோரை கொண்டு போக வேண்டும், தொழிற்சாலைகளை உரு வாக்க வேண்டும் என்ற அக்கறை காட்டுகிறார். அதற்காக கோயம்புத்தூரை இருட்டடிப்பு செய்யவில்லையே? மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட கோயம்புத்தூருக்கு வரவேண்டிய வளர்ச்சித் திட்டங்களையும் செய்துகொண்டு அதேநேரத்திலே சற்று பின் தங்கியிருக்கக் கூடிய மாவட்டங்களுக்கு நியாயமான நிதியையும் வழங்கிக் கொண்டிருக்கிறார். இதேபோல பேலன்ஸ்டாக செய்யுங்கள் என்று ஒன்றிய அரசைக் கேட்கிறோம்.*

அதனால் பிகார் போன்ற மாநிலங்கள் வளரவேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால் வளர்ந்த மாநிலமான தமிழ்நாடு போன்ற மாநிலங்களை பின் தங்கிய மாநிலங்களாக மாற்றிவிடாதீர்கள் என்பதே எங்கள் கோரிக்கை.

இந்த பட்ஜெட் நடுத்தர வர்க்கத்தினருக்கான பட்ஜெட் என்று சொல்லப்படுகிறதே?*

உழைக்கக் கூடிய நடுத்தர வர்க்கத்தினருக்கான வருமான வரி சலுகை நல்ல விஷயம். ஆனால் அதிலும் குழப்பங்கள் இருப்பதாக ஒரு கருத்து சொல்லப்படுகிறது. இதுபற்றி நிதியமைச்சர் தன்னுடைய பதிலுரையில் தெளிவு தருவார் என்று எதிர் பார்க்கிறோம்”.

இவ்வாறு அந்த பேட்டியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறியுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 94,362 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், கண்காணிப்பு பொறியாளர் (நீர்வளத்துறை) கார்த்திகேயன் உள்பட ஒன்றியக் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு தெற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

## அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் மலரஞ்சலி!

*ஈரோடு, பிப். 4-*

பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப. சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், குறிஞ்சி என்.சிவக்குமார், ஈரோடு இறைவன், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, க.சின்னையன், ப.க.பழனிசாமி, மாநகர கழக செயலாளர் மு. சுப்பிரமணியம், மேயர் நாகரத்தினம், பகுதிச் செயலாளர்கள் பொ.ராமசந்திரன், அக்னி சந்துரு, குறிஞ்சி என்.தண்டபாணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், தொமுச கோபால், செ.தங்கமுத்து, மதன் மோகன், தலைமை கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், ஈரோடு இளைய கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகி கள் பலர் பங்கேற்றனர்.

## பேரறிஞர் அண்ணா 56வது நினைவு நாள்!

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

*கோவை, பிப். 4-*

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 56 ஆவது நினைவு நாளான, நேற்று (3.2.2025 திங்கட்கிழமை) காலை 8.00 மணியளவில் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் தலைமையில், கோவை சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, கோவை காந்திபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன் தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, மு.இரா. செல்வராஜ், அ.தமிழ்மறை, தமிழ்செல்வன், மீனா ஜெயக்குமார், வி.ஜி கோகுல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.பி.கண்ணப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் ம.மகுடபதி, வெ.ந.உதய குமார், மு. மா.ச.முருகன்,ச.குப்புசாமி, ஆடிட்டர் சசிகுமார், நோயல் செல்வம்,சரஸ்வதி புஷ்பராஜ், பகுதிச் செயலாளர்கள் ப.பசுபதி,ஆர்.எம்.சேதுராமன், மா.நாகராஜ், கோவை லோகு,மார்க்கெட் எம். மனோகரன்,வி.ஐ.பதுருதீன்,எஸ்.எம்.சாமி,சிங்கை மு.சிவா வ.ம.சண்முக சுந்தரம்,கே.எம்.ரவி, எ.எம். கிருஷ்ணராஜ், பரணி, கே.பாக்கியராஜ்,

மண்டலத் தலைவர்கள் மீனா லோகு, இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், தெய்வயானை தமிழ் மறை,பணிகள் குழு சாந்தி முருகன், வட்டக் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள் இரா.தனபால், நா.பாபு, டெம்போ சிவா, அர்ஜுனன், ஆர். கே.சுரேஷ்குமார், வி.அன்னம் மாள், இலா.தேவசீலன், சிவப்பிரகாஷ், ஏ.எஸ். ஜெயகுமார், கோவை அபு, வி.மணி, சாந்தா மணி பன்னீர்செல்வம்,கண்ணதாசன், தென்னவன் சுப்பிரமணியன், பெரியசாமி PF ஆனந்த, ஆர்.எஸ்.புரம் பூபாலன், எல்.பி.எப். விவேகானந்தன் நாராயணன், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், BLA 2 பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## கழக நெசவாளர் அணி துணைச் செயலாளர்

# ஆண்டிப்பட்டி ஆ.ராமசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, பிப். 4 -

திராவிட முன்னேற்றக் கழக மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர்ஆ.ராமசாமி அவர்கள் 1.2.2025 அன்று இரவு இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச் செய்தி அறிந்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு : -

கழக நெசவாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும், ஆண்டிப்பட்டி பேரூராட்சி முன்னாள் தலைவருமான திரு. ஆ.ராமசாமி அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து வருத்தமுற்றேன்.

கழகத்தின் கொள்கை வழி நின்று கழகமே தனது மூச்சாக பணியாற்றியவர். கலைஞர் அவர்கள் மீதும்,என் மீதும் மிகுந்த பற்று கொண்டவர்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர்களுக்கும் – கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் – கழகத் தலைவர் –

# முதல்வர் பிறந்தநாளை மக்கள் விழாவாக வெகுவிமர்சையாக கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

*திருவள்ளூர், பிப்.4 -*

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை மக்கள் விழாவாக வெகு விமர்சையாக கொண்டாடுவோம் என “சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சாதனை நாயகர், மக்கள் தலைவர், தமிழ்நாட்டின் உரிமையை மீட்டெடுத்த ஒப்பற்ற அரசியல் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை வெகு விமரிசையாக கொண்டாட மிகுந்த ஆர்வத்துடன் கழகத்தினர் தயாராகி வருகின்றனர். அதில், கழகத்தின் முதல் மாவட்டமாக திருவள்ளூர் மத்திய மாவட்டம் களத்தில் இறங்குகிறது என்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

கழகத் தலைவர் - தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா என்றாலே என்னைப் போன்ற நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் கொண்டாட்டம்தான். மற்ற அரசியல் கட்சியினரின் பிறந்தநாளைப் போன்று இது சம்பிரதாய கொண்டாட்டம் இல்லை. எங்களுடைய தலைவரைக் கொண்டாட ஆயிரம் காரணங்கள் உண்டு.

**வெற்றி நாயகர்!**

கழகத்தின் தலைமைப் பொறுப்பிற்கு வந்த பின்னர் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நின்று வென்று தி.மு.க.விற்கு வாகை சூடிய வெற்றி நாயகர் அவர். முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. கூட்டணி 2019, 2021, 2024 ஆகிய மூன்று பொதுத் தேர்தல்களிலும் தொடர்ந்து மகத்தான வெற்றி பெற்றது.

10 ஆண்டுகள் சோர்ந்து போயிருந்த கழகத் தொண்டர்களுக்கு தேர்தல் வெற்றியை பரிசாக அளித்திருக்கிறார் நம்முடைய தலைவர். 3 பொதுத் தேர்தல்களிலும் கூட்டணியை உடையாமல் அரவணைத்துச் சென்று மிகத் திறமையான அரசியல்வாதி என்பதை எதிர்க்



கட்சியினரே ஆச்சரியப்படும் வகையில் அரசியல் செய்து வருகிறார்.

இதனால் தான், நாட்டில் பெரும்பாலான மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும், தமிழ்நாட்டில் மட்டும் முதலமைச்சர் தளபதி அவர்களை எதிர்த்து பா.ஜ.க.வினால் அரசியல் செய்ய முடியவில்லை.

மாநிலங்கள் மீது அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய அரசு நடத்திக் கொண்டிருக்கும் போதெல்லாம் முதல் ஆளாய் எதிர்த்து நிற்பது தலைவர் தளபதி அவர்கள் தான். சமீபத்தில் கூட யு.ஜி.சி. வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வேண்டும் என தி.மு.க. அரசு எதிர்ப்பை பதிவு செய்த பின்னர்தான் கேரளா, கர்நாடக மாநிலங்களின் குரல்களும் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியிருக்கிறார் முதலமைச்சர் தளபதி அவர்கள்.

தமிழ்நாட்டின் இன்றைய வளர்ச்சியை சாதாரணமாக நாம் அடையவில்லை. சமூக நீதிக்கான 100 ஆண்டுகள் போராட்டங்கள் வழியாகத்தான் அவை சாத்தியமாகியிருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா ஏற்படுத்தித் தந்த அடித்தளத்தில், நவீன தமிழ்நாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கினார். அவர்களின் வழியில் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை மேலும் உயர்த்தி வருகிறது.

இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறார். இந்தியாவின் வலிமைமிக்க விளையாட்டு மையமாக தமிழ்நாட்டை மாற்றியிருக்கிறார். அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் திராவிட மாடல் ஆட்சிக்குத் தான் முதலிடம்.

**தொலைநோக்கு திட்டங்கள்!**

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதி என பெண்களின் முன்னேற்றத்திற்காக தொலைநோக்கு சிந்தனையோடு திட்டங்களை செயலபடுத்துகிறார் முதலமைச்சர். பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கி அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து தாயுமானவராக திகழ்கிறார்.

தமிழ் நிலப்பரப்பில் இருந்து தான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல உலகிற்கே அறிவித்து தமிழர்களின் தொன்மையை பறைசாற்றியிருக்கிறார்.

**மக்கள் விழாவாக கொண்டாடுவோம்!**

இப்படி தி.மு.க.விற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் பெருமை சேர்க்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாளை மக்களின் விழாவாக கொண்டாடுவோம். கழகத்தின் பெரு மையை பறைசாற்றும் வகையில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் இருக்கும் ஆவடி மாநகரத்தின் 4 பகுதிகள், 3 நகரங்கள், 6 ஒன்றியங்கள், 1 பேரூர் உள்ளிட்ட 14 நிர்வாகங்களுக்கு உட்பட்ட 71 ஊராட்சிகள், 129 வார்டுகள், 642 கிளைகள் என ஒவ்வொரு இடத்திலும் விதிகளுக்குட்பட்டு இருவண்ண கழகக் கொடி யேற்றுவோம்.

மேலும் மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி, தலைவரின் மகத்தான சாதனைகளை எடுத்துரைப்போம். சமுகத்தின் விளிம்புநிலை நிலையில் உள்ள ஏழை குடும்பத்தினருக்கும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளோருக்கும், மாற்றுதிறனாளிகள், நரிக்குறவர் இன மக்கள் என அனைவருக்கும் அரசி, பருப்பு, புத்தாடைகளை வழங்குவோம். படிக்கும் மாணவ கண்மணிகளுக்குத் தேவையான நோட்டு புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்குவோம். அறுசுவை உணவுகளையும் வழங்கி மக்கள் நாயகரின் பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடுவோம்.

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை திருவப்பூர் ரயில்வே மேம்பாலம் அமைவதை தொடர்ந்து அதன் ஆயத்த பணிகள் குறித்து புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா ரயில்வே துறை அதிகாரிகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.




திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில், மாமன்ற கூட்டம் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி, துணை மேயர் ரா. பாலசுப்ரமணியம், மண்டலத் தலைவர்கள் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமா மகேஸ்வரி உள்பட மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.